**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**CC.No. 46/2021 D.W. 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாலகிருஷ்ணன்** | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லம் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 17.07.2026.**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆவேன். இவ்வழக்கில் புகார்தாரர் கோபால் என்பவர் எனது வீட்டிற்கு பக்கத்தில் வசிக்கும் நபர் ஆவார். எனவே அவரை எனக்கு நன்குத் தெரியும்.

2. எங்கள் ஊரில் கோவில் காவடி சீட்டு நடத்துவது வழக்கம். நானும் 2018-ம் வருடம் கோவில் காவடி சீட்டில் சேர்ந்தேன். அப்பொழுது புாகர்தாரர் காவடி சீட்டு பண்ட்-ல் தலைவராக இருந்தார்.

3. அந்த சீட்டானது 2 லட்சம் ரூபாய் சீட்டாகும். அதில் நான் சீட்டு பணமாக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் பெற்றிருந்தேன். அதற்கு மாதந்தோறும் சீட்டுத் தொகையை முறையாக செலுத்தி வந்தேன். ஆனால் இறுதியில் 60 ஆயிரம் ரூபாய் என்னால் செலுத்த முடியாமல் இருந்தது.

4. எனவே புகார்தாரர் அந்த 60 ஆயிரம் ரூபாயை சீட்டு பண்ட் கட்டுவதாகவும் அந்த பணத்தை என்னிடம் அதன்பிறகு மாதம் 5 பைசா வட்டியுடன் சேர்த்து தருமாறு கூறினார். நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன். அப்பொழுது என்னுடன் எங்கள்

ஊரிலிருந்து காவடி சீட்டில் சேர்ந்திருந்த நபர்ளான கலைஞர் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள்.

5. மேலும் என்னிடமிருந்து பிணையாக ஒரு கையொப்பம் மட்டும் செய்த SBI வங்கியின் காசோலையை பெற்றிருந்தார். மேலும் நான் அவருக்கு கொடுக்க வேண்டிய மாத வட்டித் தொகையை முறையாக கொடுத்து வந்தேன். அதன்பிறகு 6 மாத காலங்கள் என்னால் வட்டித் தொகையை கொடுக்க முடியாமல் இருந்ததால் அதனை அவர் கேட்ட பொழுது நான் அதற்கு காலம் கேட்டிருந்தேன். அப்பொழுது எனக்கும் அவருக்கும் வாய்தகராறு ஏற்பட்டது.

6. எனவே நான் பிணையாக கொடுத்த காசோலையை வைத்து என் மீது 6 லட்சம் ரூபாய் கடன் வாங்கியது போல் பொய்யாக எனது காசோலையை நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேலும் அவருக்கு தரவேண்டிய 60 ஆயிரம் ரூபாய்க்கு வட்டியுடன் சேர்த்து தருவதற்கு தயாராக உள்ளேன். எனவே இவ்வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.